காலாண்டுத் தேர்வு – 2024 B

தமிழ்

வகுப்பு : 8 மதிப்பெண்கள் : 60

காலம் : 2.30 மணி

பகுதி – I

(மதிப்பெண்கள் : 15)

அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. 15 × 1 = 15

| வினா எண் | விடைக் குறியீடு | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | ஆ | தந்தை பெரியார் | 1 |
| 2 | ஆ | பிறர்குற்றம்,என்குற்றம் | 1 |
| 3 | ஆ | அகம்பாவம் | 1 |
| 4 | ஆ | சீருக்கேற்ப | 1 |
| 5 | அ | ஆக்கல் | 1 |
| 6 | ஆ | வட்டெழுத்து | 1 |
| 7 | அ | இளமை | 1 |
| 8 | ஆ | வியப்புக்குறி | 1 |
| 9 | இ | நெடுந்தேர் | 1 |
| 10 | ஈ | இரத்தக்கொதிப்பு | 1 |
| 11 | இ | கூட்டம் | 1 |
| 12 | ஆ | எச்சம் | 1 |
| 13 | இ | தலை | 1 |
| 14 | ஆ | கல்லாதவர் | 1 |
| 15 | ஈ | காலை - மாலை | 1 |

(மதிப்பெண்கள் : 4)

பொருத்துக. 4 × 1 = 4

16. பசு மரத்து ஆணிபோல – எளிதில் மனத்தில் பதிதல்

17. காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது போல – தற்செயல் நிகழ்வு

18. விழலுக்கு இறைத்த நீர் போல - பயனற்ற செயல்

19. கிணறு வெட்ட பூதம்

கிளம்பியது போல - எதிர்பாராத நிகழ்வு

பகுதி – II - பிரிவு – 1

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

(மதிப்பெண்கள் : 12) $6 \times 2 = 12$

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 20 | மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயில். | 2 |
| 21 | மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது. | 2 |
| 22 | ✓ திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும். இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும்.<br>✓ தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும். | 1<br>1 |
| 23 | தினமும் நாற்பத்தைந்து நிமிடத்தில் மூன்று கி.மீ.நடைப்பயணம்<br>பதினைந்து நிமிடம் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி<br>ஏழு மணிநேரத் தூக்கம்<br>மூன்று லிட்டர் தண்ணீர் அருந்துதல் ஆகியன அவசியம். | 1<br>1 |
| 24 | எகர ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார்.<br>எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும் ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.<br>அதேபோல ஏகார ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக் கொம்பு, இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து புதிய வரிவடிவத்தை அறிமுகப்படுத்தினார்.<br>(ஏதேனும் இரண்டு எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்) | 1<br>1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 25 | இளங்கோ, திருத்தக்கத்தேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி | 2 |
| 26 | தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையை த் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும். | 2 |
| 27 | இந்நிலம் செவ்விந்தியர்களுக்குப் புனிதமாகும். இப்பூமியே அவர்களுக்குத் தாயாகும். அவர்கள் இம்மண்ணிற்கு உரியவர்கள். இம்மண்ணும் அவர்களுக்கு உரியது. | 2 |

(மதிப்பெண்கள் : 12)

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக. $6 \times 2 = 12$

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 28 | வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். | 2 |
| 29 | அ) திருக்குறள் அறம்,பொருள்,இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது.<br>ஆ) தி.ரு.வி.க எழுதிய 'பெண்ணின் பெருமை' என்னும் நூல் புகழ்பெற்றது. | 1<br>1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 30 | உவமை அணி | 2 |
| 31 | அ) Awareness - விழிப்புணர்வு<br>ஆ) Vowel – உயிரொலி | 1<br>1 |
| 32 | ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது. | 2 |
| 33 | பொருத்தமான விடையாய் இருப்பின் மதிப்பெண் வழங்கவும். | 2 |
| 34 | படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி வேற்றுமை என்கிறோம். | 2 |
| 35 | பொருத்தமான விடையாய் இருப்பின் மதிப்பெண் வழங்கவும். | 2 |

பகுதி – III - பிரிவு

(மதிப்பெண்கள் : 6)

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக. $2 \times 3 = 6$

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 36 | அ) தக்கார் தகவிலர் என்பது அவரவர்<br>எச்சத்தால் காணப் படும்.<br>ஆ) தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்<br>இடங்கண்ட பின்அல் லது.<br>இ) உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்<br>களர்அனையர் கல்லா தவர். | 3 |
| 37 | உடலில் உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார். உடல் உறுதியற்ற நோயாளர்க்கு வாழும் இடமும் செல்வமும் இனிய வாழ்வு தாரா. சுத்தம் நிறைந்துள்ள எல்லா இடங்களிலும் சுகம் உண்டு. நாள்தோறும் நீங்கள் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்ததால் நீடித்த வாழ்நாளைப் பெறலாம். காலையும் மாலையும் நடைப்பயிற்சி மேற்கொண்டு, நல்லகாற்றைச் சுவாசித்து வருவோரை நோய் அணுகாது. அவர் உயிரைக் கவர எமனும் அணுகமாட்டான். எனவே, நீங்கள் கூழைக் குடித்தாலும் குளித்தபிறகே குடித்தல் வேண்டும்! நீங்கள் வறுமையில் வாழ்ந்தாலும் இரவில் நன்றாக உறங்குதல் வேண்டும். அளவாக உண்ணாமல் அதிகமாக உண்டால் செரிமானம் தடுமாறி நாள்தோறும் நோய்வாய்ப்பட்டுப் பாயில் விழுவீர்கள். தூய்மையான காற்றும் நல்ல குடிநீரும் நன்கு பசித்த பிறகு உண்பதும் நம்மை நோய் அணுகாமல் காப்பாற்றும்! நூறாண்டு | 3 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 38 | வாழ வைக்கும். அரிய நம் உடல் நலமோடு இருப்பதற்கான வழிகள் இவை என்பதை அறிவீர்களாக! ஆகவே நோய் வருமுன் காப்போம்! உலகம் புகழ வாழ்வோம்!<br>ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை. அதுபோலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை. | 3 |

பிரிவு - 2

(மதிப்பெண்கள் : 6)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2x3=6

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 39 | நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுத்தப்படுகிறது. ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுத்தப்படுகிறது. ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுத்தப்படுகிறது. குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது. | 3 |
| 40 | கலப்பில் வளர்ச்சியுண்டென்பது இயற்கை நுட்பம். தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந் தேடுவோம் என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங் காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும். | 3 |
| 41 | அ) எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனது என சியாட்டல் கூறுகிறார். | 1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ஆ) வளமான வாழ்வால்<br>இ) தாயாகக் கருதுகிறார். | 1<br>1 |

பிரிவு – 30.2

(மதிப்பெண்கள் : 6) 2x3=6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 42 | இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையான பொருள்களில் வரும்.<br>ஆக்கல் - கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.<br>அழித்தல் - பெரியார் மூடநம்பிக்கைகளை ஒழித்தார். அடைதல் - கோவலன் மதுரையை அடைந்தான்.<br>நீத்தல் - காமராசர் பதவியைத் துறந்தார்.<br>ஒத்தல் - தமிழ் நமக்கு உயிரைப் போன்றது.<br>உடைமை - வள்ளுவர் பெரும் புகழை உடையவர். | 1<br><br>1<br><br>1 |
| 43 | எழுதி வந்தான் – இத்தொடரில் உள்ள எழுதி என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.<br><br>மெல்ல வந்தான் – இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்திவரும் வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் எனப்படும். | |
| 44 | ஏவல் வினைமுற்று: முன்னிலையில் வரும்.<br>வியங்கோள் வினைமுற்று: இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். | 3 |

| | | | |
|---|---|---|---|
| | ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. | |
| | கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும். | வாழ்த்துதல், வைதல், விதித்தல் , வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும். | |
| | விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | விகுதி பெற்றே வரும். | |
| | | | |

## பகுதி - IV

அடிபிறழாமல் எழுதுக. 2+3=5

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 45 | தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்<br>என்குற்றம் ஆகும் இறைக்கு. | 1<br>1 |
| 46 | அ)வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!<br>வாழிய வாழியவே! வான மளந்தது அனைத்தும் அளந்திடு<br>வண்மொழி வாழியவே! ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி<br>இசைகொண்டு வாழியவே! | 3 |
| | ஆ) நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி<br>நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்<br>கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்<br>குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி | 3 |

## பகுதி – V

3x6=18

விடை எழுதுக.

| வினா எண் | விடைக் குறிப்புகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 47 | அ) முகவரி<br>கருத்துகள்<br>உறைமேல் முகவரி | 6 |
| 48 | அ) கருத்திற்கேற்ப மதிப்பெண் வழங்கலாம். | 6 |
| | ஆ) நடுவு நிலைமை உடையவர், நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படும். | 6 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும். | |
| 49 | அ) தனித்துவமான பார்வை இதன் முதல் சிறப்பு. இரண்டாவது, சூழலுக்கு இசைந்த மருத்துவம் இது. இந்த மருத்துவத்தின் பயன்பாடோ, மூலக்கூறுகளோ, மருந்துகளோ சுற்றுச்சூழலைச் சிதைக்காது. மிக முக்கியமான சிறப்பு என்னவென்றால், நோய்க்கான சிகிச்சையை மட்டும் சொல்லாமல், நோய் மீண்டும் வராமலிருப்பதற்கான வாழ்வியலையும் சொல்கிறது. அதாவது, நோய்நாடி நோய் முதல்நாடி என்ற திருக்குறளின்படி நோயை மட்டுமன்றி, அதன் காரணிகளையும் கண்டறிந்து ஒருவரை நோயில்லாத மனிதராக்குகிறது. | 6 |
| | ஆ) கருத்திற்கேற்ப மதிப்பெண் வழங்கலாம். | 6 |
| பகுதி - VI | | |
| 50 | அ) முன்னுரை:<br>காடர்கள்,பழங்குடியின மக்கள், செடிகொடிகள், விலங்குகள் தொடர்பான கதைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கும் சொல்லி வந்தனர். அத்தகைய கதைகளுள் ஒன்று தான் வெட்டுக்கிளியும் சருகுமானும் ஆகும்.<br>வெட்டுக்கிளியும் சருகுமானும்:<br>குறிஞ்சிப் புதரின் தாழப் படர்ந்திருந்த கிளையில் பச்சை வெட்டுக்கிளி ஒன்று வசித்து வந்தது. அது ஒரு வாயாடி.<br>ஒரு மாலை நேரம் கூரன் என்ற பெண் சருகுமானை வெட்டுக்கிளி பார்த்தது. 'என்ன கூரன்,பார்த்து வெகுநாள் ஆயிற்று! இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்கும்மாய் ஓடுகிறாய்?'அதற்கு சருமானை,'காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன்.இப்பொழுது உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை.பித்தக்கண்ணு என்னைத் துரத்திக் கொண்டு வருகிறது.'<br>விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்தும் அதன் அடியில் கூரன் ஒளிந்து கொண்து.தலையை மட்டும் தூக்கி வெட்டுக்கிளியை | |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | எச்சரித்தது.பித்தக்கண்ணு உன்னிடம் என்னைப் போற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடாதே என்றது.<br>வெட்டுக்கிளியும் பித்தக்கண்ணும்:<br>கூரனைத் தேடிக் கொண்டு பித்தக்கண்ணும் ஓடைப் பக்கம் வந்த்து. வெட்டுக்கிளி அதன் கண்ணில் பட்டதும் அதைப் பார்த்து உறுமியது. 'கூரன் இங்கு வந்தானா?'என்றது.வெட்டுக்கிளிக்கு உற்சாகம் தலைக்கு ஏறியது.பித்தக்கண்ணுவை இவ்வளவு பக்கத்தில் பார்ப்பது இதுதான் முதல் முறை. பித்தக்கண்ணுவைப் பார்த்ததால் ஏற்பட்ட பரவசத்தை அடக்க இயலாமல் தன்னை அறியாமல் கூரன் ஒளிந்திருந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது.<br>உயிர்பிழைத்த கூரன்:<br>கூரன் வெளியே வந்தது. தன் மறைவிடத்தை ஏறக்குறையக் காட்டிக் கொடுத்ததற்காக வெட்டுக்கிளி மீது அதற்குக் கோபமான கோபம்.அதற்கு ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும் என்று எண்ணியது.'இனி இப்படிச் செய்தால்,திரும்பி வந்து உன்னை என் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன்' என்று கூறிக் காட்டுக்குள் ஓடியது.<br>முடிவுரை:<br>அன்றிலிருந்து கூரனின் கூர்ப்பாதங்கள் எங்கே தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்திலேயே வெட்டுக்கிளி வாழ்ந்து வருகிறது.இதனால் தான் இன்றும்கூட வெட்டுக்கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து இருக்க முடியாமல் குதித்த வண்ணமுள்ளன | |
| | ஆ) முன்னுரை<br>காணாமல் போன வேட்டி<br>ஊர்மக்கள் கூற்று<br>திருக்குறள் வகுப்பு<br>சகாதேவன் செயல்<br>ஆசிரியரின் எண்ணம்<br>முடிவுரை | 1<br>1<br>1<br>1<br>2<br>1<br>1 |
| 51 | அ) முன்னுரை | 1 |

| | | |
|---|---|---|
| | பிறப்பு<br>இளமைப்பருவம்<br>சாதனைகள்<br>முடிவுரை | 2<br>2<br>2<br>1 |
| | ஆ) முன்னுரை<br>நோய் வர காரணங்கள்<br>நோய் தீர்க்கும் வழிமுறைகள்<br>வருமுன் காத்தல்<br>உணவும் மருந்தும்<br>உடற்பயிற்சியின் தேவை<br>முடிவுரை | 1<br>1<br>2<br>1<br>1<br>1<br>1 |

www.Padasalai.Net